முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| OS 5/2015 |
| வா.சா.1(ஜெயராஜ்) |
| நாள் 12.10.2020 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (3,4 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் தான் துரைராஜ் மகன் ஜெயராஜ் என்பதை காட்டவும், முதல் விசாரணையில் கூறியுள்ள முகவரியில் வசிக்கிறேன் என்பதை காட்டவும் ஓட்டுநர் உரிமம் நகல் மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை கொண்டு வந்துள்ளேன். (சாட்சி மேற்படி ஆவணங்களை காட்டினார்). இந்த வழக்கை யார் யார் மீது என்ன பரிகாரத்திற்காக போட்டுள்ளார்கள் என்று தெரியும். புஸ்பலதா என்பவர் மகன் யுவராஜ் என்பவர் மீது வழக்கு போட்டுள்ளார்கள். இந்த வழக்கில் பரமேஸ்வரி என்னை சாட்சி சொல்ல கூட்டி வரவில்லை. நானாகவே வந்தேன். பழனிசாமி என்பவர் என் நண்பர். அவர் மனைவி பரமேஸ்வரி என்னை கூட்டி வந்தார். அவர் சாட்சி சொல்ல வேண்டும் என்று கேட்டதால் வந்தீர்களா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் எங்கு உள்ளது என்று தெரியாது. சொத்து சம்பந்தமாக என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரமும் தெரியாது. பழனிசாமி பைனான்ஸ் எதுவும் நடத்தவில்லை. பழனிசாமிக்கு வருமானம் இருந்தது, அதை கொண்டு அவர் கடன் கொடுத்து வந்தார் என்றால் சரி. அவர் கரூர் பைபாஸ் ரோட்டில் கேஸ் சர்வீஸ் சென்டர் வைத்திருந்தார். நானும் பழனிசாமியிடம் பணம் வாங்கியிருந்தேன். அந்த வகையில் பழக்கம். பழனிசாமி முதலில் பேருந்தில் நடத்துனராக இருந்தார். அது தனியாருக்கு சொந்தமான பேருந்து. பேருந்தின் பெயர் தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையை நான் தான் ஈரோட்டில் டைப் அலுவலகத்தில் வைத்து டைப் அடித்தேன். சந்திரன் ஸ்டுடியோ அருகில் வைத்து டைப் செய்தேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை எவ்வாறு அடித்தீர்கள் என்றால் பழனிசாமி மகன் சுரேசிடம் தெரிந்து கொண்டேன். ஆனால் நானே தான் சொல்லி அடித்தேன். பழனிசாமி கேஸ் சர்வீஸ் சென்டர் வைத்திருந்தார் என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். பழனிசாமி இறப்பதற்கு 6,7 வருடங்களுக்கு முன்பிருந்தே அவரை எனக்கு தெரியும். பழனிசாமி பாலமுடையம்மன் கோயில், கவுண்டச்சிபாளையத்தில் தர்மகர்த்தாவிற்கு அடுத்த நிலையில் இருந்து திருப்பணிகளை செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவரிடம் அவ்வப்போது போவேன், நெருக்கமான பழக்கம் கிடையாது. அவர் யார் யாருக்கு கடன் கொடுத்துள்ளார்,அதை யார் யார் அவருக்கு திரும்ப கொடுத்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. 2010 முதல் 2012 பிப்ரவரி 23 ம் தேதி வரை பழனிசாமி மேற்படி கோயிலின்

*கணக்கு வழக்குகளில் சிரமம் ஏற்பட்டு , கடனாகி தன் கௌரவத்தை காப்பாற்ற தனது சொத்துக்களை விற்று கடன்களை அடைத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அதன் பின் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் அந்த விவரம் தெரியும். மருத்துவமனைக்கு செல்ல அவர் தனது சில சொத்துக்கள் மீது உடன்படிக்கை ஏற்படுத்தி பணம் பெற்றிருந்தார் என்றால் அந்த விவரம் தெரியாது. அது சம்பந்தமான வழக்குகள் போடப்பட்டதா என்ற விவரத்தை சுரேஸ்,பரமேஸ்வரி ஆகியோர் என்னிடம் சொல்லவில்லை. வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும், பரமேஸ்வரி கேட்டுக்கொண்டதற்கிணங்கள் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.*

Uploded by

SS